வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 4123/ஆ4/2019, நாள் 24.08.2019

– – –

பொருள் : கல்வித் தொலைகாட்சி துவக்க விழா 26.08.2019 – மாணவ மாணவியர்கள் மற்றும் பெற்றோர்கள் கல்வித் தொலைக்காட்சி துவக்க விழா நிகழ்ச்சிகளை காணும் பொருட்டு அனைத்துவகைப் பள்ளி தலைமையாசிரியர்கள்/ முதல்வர்களுக்கு அறிவுரை வழங்குதல்– சார்ந்து.

பார்வை : 1)சென்னை.9, பள்ளிக்கல்வித்துறை, அரசு முதன்மைச்செயலர் அவர்களின் அறிவுரைகள் நாள் 23.08.2019
2) சென்னை–6, மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் இயக்குநரின் கடித ந.க.எண்.7746/டி2/2014, நாள் 23.08.2019
3) சென்னை–6, பள்ளிக்கல்வி இயக்குரின் செயல்முறைகள் ந.க.எண்.007/கல்வித் தொலைக்காட்சி 2019, நாள் 24.08.2019

– – –

கல்வித் தொலைக்காட்சி துவக்க விழா 26.08.2019 திங்கட்கிழமை அன்று காலை 9.00 மணியளவில் சென்னை–85, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்வித் தொலைக்காட்சியை துவக்கி வைத்து விழா பேருரையாற்றவுள்ளார்.

மேற்காணும் நிகழ்வுகளை மாணவ/மாணவியர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் காணும் பொருட்டு 26.08.2019 திங்கட்கிழமை அன்று மாலை 3.00 மணி முதல் 4.00 மணிவரை கல்வி தொலைக்காட்சி நிலையத்திலிருந்து ஒளிபரப்பு செய்யப்படவுள்ளது. இதனை அனைத்து மாணவ/மாணவியர்கள்/ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் பார்க்கும் வகையில் அனைத்துவகை பள்ளித் தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள் தக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

- கேபிள் இணைப்பு வசதி கொண்ட பள்ளிகளின் தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள் மாணவ/மாணவியர்கள் நேரடியாக தொலைக்காட்சி ஒளிபரப்பு நிகழ்ச்சியினை பார்க்கும் பொருட்டு LCD/PROJECTOR போன்ற உபகரணங்களை ஏற்பாடு செய்தல் வேண்டும்.
- கேபிள் இணைப்பு வசதியில்லாத பள்ளிகளில் தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள் கல்வித் தொலைக்காட்சி துவக்க நிகழ்ச்சியினை YouTube–ல் (KALVI TV) APP-ல் பதிவேற்றம் செய்யப்பட்டு YouTube குறியீட்டு எண்ணை 26.08.2019 அன்று 2.15 மணியளவில் முதன்மைக்கல்வி அலுவலக இணைய தளத்தில் (www.edwizevellore.com) தெரிவிக்கப்படும் இதனை பதிவிறக்கம் செய்து LCD/PROJECTOR மூலம் மாணவ மாணவியர்கள் காணும் பொருட்டு ஏற்பாடு செய்தல் வேண்டும்.
- அனைத்துவகை பள்ளித் தலைமையாசிரியர்கள்/முதல்வர்கள் மாணவ மாணவியர்கள் கல்வித் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிகழ்ச்சியை காண்பதினை புகைப்படங்கள் (Photos) எடுத்து EMIS இணையதளத்தில் உடனடியாக பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

மேலும், தமிழக அரசின் கல்வித் தொலைக்காட்சி திறப்பு விழா நிகழ்ச்சிகளை பள்ளியில் பயிலும் மாணவ/ மாணவியர்கள் காண தொலைகாட்சி ஏற்பாடு செய்ய ஆகும் செலவினத் தொகையினை பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழக நிதியிலிருந்து எடுத்து செலவினம் மேற்கொள்ளுமாறு அனைத்துவகை பள்ளி தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
அனைத்துவகை பள்ளி தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள்

நகல்
1) அனைத்து மாவட்டக்கல்விஅலுவலர்கள் – தொடர் நடவடிக்கைமேற்கொள்ளும் பொருட்டு
2) அனைத்து வட்டாரக்கல்வி அலுவலர்கள் – தொடர் நடவடிக்கைமேற்கொள்ளும் பொருட்டு